1970 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தின் சிறப்பு அதிகரித்து வருவதால், கூட்டுறவுப் பணி குறித்து முழு அளவில் கவனிப்பதற்காக வென்றே செயலகத்தில் கூட்டுறவுத் துறை தனியாக அமைக்கப்பட்டுள்ளது. இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இத்துறையில் அரசுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறையைத் தனியாகப் பிரித்ததால் நல்ல முறையிலே இயங்குவதாக அரசாங்கம் கருதுகிறதா? அதுபோல் வேறு ஏதாவது இலாக்காக்களைப் பிரிக்க அரசாங்கம் கருதியிருக்கிறதா? கடந்த ஓராண்டு காலத்தில் கூட்டுறவுத் துறைக்கு இரண்டு செயலாளர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்களா? அதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இத்துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டது, நிர்வாக வசதிக்காகவும், காரியங்களை விரைவுபடுத்த வேண்டிய தற்காகவும் இருக்கிறது. 1965-ம் ஆண்டிலேகூட உணவு, வேளாண்மைத் துறை இரண்டாகத் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. 1967-க்குப் பிறகு தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுத் துறை இன்னும் அதிகப் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியிருப்பதால் நிலவள வங்கி போன்ற காரியங்களில் ஈடுபட வேண்டியிருப்பதால் இப்படி இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தனியாக ஒரு நிலை ஏற்பட வேண்டுமென்ற அளவில் அரசு அந்த முயற்சியை மேற்கொண்டது. அதிலே செயலாளர்கள் அடிக்கடி மாற்றப்படுவதாகச் சொல்லுகிறார்கள். நிர்வாக வசதியைப் பொறுத்து அப்படிப்பட்ட காரியங்களை மேற்கொள்வதில் தவறு ஏதுமில்லை.

Classification of Backward Communities.

*628 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the **Hon. the** Minister for Backward Classes be pleased to sttte :

(*a*) whether the Government is considering the revision of the system of classification of Backward Communities; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) இல்லை.

(இ) பின்னிலை வகுப்பினர் நலனை ஆராய அரசு அண்மையில் அமைத்துள்ள குழுவின அறிக்கை கிடைத்தபின் அவசியமானால் இப்பிரச்னை ஆராயப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பின்னிலை வகுப்பினர் பிரச்னையைப் பற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு தன்னுடைய அறிக்கையை எந்த கால கட்டத்தில் கொடுக்க வேண்டும் என்று ஏதாவது காலவரை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, ஜூன் திங்கள் முடிவதற்குள் இந்த அறிக்கை கிடைக்குமாறு அவர்கள் பணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள்: தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பினர் பகுதிகளில் வீரகுடி வேளாளர், வேடுவ நாயக்கர் என்று இரண்டு பகுதியினர் ஜாபிதாவில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றனர். அப்படியிருந்தபோதினும் ஒரு ஜில்லாவில் தான் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக, வீரகுடி வேளாளர் மதுரை மாவட்டத்தில் இல்லை என்று கூறியும், வேடுவர் நாயக்கர் என்று கையெழுத்துப் போடவே

திலும் அவர்களுக்கு எவ்விதச் சலுகையும் கிடைப்பதில்லை. ஆகையால் அவர்களுக்கு எல்லாச் சலுகைகளேயும் கொடுப்பதுபற்றி, மறு பரிசீலனை செய்து, எந்தத் தடங்கலும் இல்லாத முறையில், தகுந்த சான்றிதழ் கொண்டுவந்தால் அவர்களுக்கு சலுகைகள் கிடைக்க ஏற்பாடு செய்து இந்த ஜாபிதாவை புனர் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இதுபோன்ற வேண்டுகோளை அல்லது கோரிக்கையை குழுவினருடைய அறிக்கை வந்த பிறகு, பொதுவாகப் பரிசீலனை செய்து, தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. ப. மகாதேவன்: குமரி மாவட்டத்தில் மட்டும் வாழ்கின்ற நாஞ்சில் நாடு வேளாளர் என்று சொல்கிற மக்களுக்கும் பின்தங்கிய வகுப்பினருக்கு அளிக்கக்கூடிய சலுகைகளை கொடுக்க முடியுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இதுபோன்ற கோரிக்கைகளை யெல்லாம் ஒழுங்குற அவர்கள் பரிசீலனை செய்து, அரசுக்கு அறிக்கை தரவேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது, கனம் உறுப்பினர் தெரிவித்த அந்த கோரிக்கையும் இந்தக் குழுவினுடைய அறிக்கைக்குப் பிறகு பரிசீலிக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is need to revise the list of backward classes because among the Telugu backward classes there is a caste called Kapu (cultivators). In Kanada the same caste is called 'Vakkaliga' If you say 'Vakkaliga' he is considered backward. But if he is called 'Kapu' no concession is given. He is not considered backward. Only if he is called 'Vakkaliga' he is given backward class concession. So I request that the name of 'Kapu' be included in the list of backward classes. There are other castes. There is the 'Jalakara' Caste that is one who cleans the impliments of goldsmiths. He gets about three or four annas per day. He is very poor. Their name should be included in the backward class list. Will the Government take into consideration my request and include the classes in the revised list of backward classes?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோரிக்கைகளையெல்லாம், அவர்கள் அந்தக் குழுவினிடத்திலே கூட நேரில் சந்தித்து அவர்களுடைய எண்ணங்களை அறிவிக்கலாம். அல்லது, சம்பந்தப்பட்ட வகுப்பினர்களும் அறிவிக்கலாம். அவ்வாறு அறிவித்த பிறகு, குழுவினுடைய பரிந்துரைகளின் மீது அரசு முடிவெடுக்கும்பொழுது, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோரிக்கையையும் நினைவில் வைத்து, அரசு ஆவன செய்யும்.

* 629 வின—**திரு. டி. மார்டின்:** மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Joint Council of Christians of Tamil Nadu 10—1—70 தேதியிட்ட மனு ஒன்றினை தமிழ்நாடு அரசுக்கும், பின்தங்கிய வகுப்பினர் குழுவுக்கும் அனுப்பியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) பின்தங்கிய வகுப்பினர் நலக் குழுவின் பரிந்துரை அரசுக்கு கிடைத்த பிறகு இதுபோன்ற கோரிக்கைகளை அரசு ஆலோசிக்கும்.